Tamil
Only Believe
53-0217

# விசுவாசிக்க மாத்திரம் செய்

Tallahassee, Florida USA
53-0217

www.messagehub.info

வில்லியம் மரியன் பிரன்ஹாம்

"... சத்ததின் நாட்களிலே..." வெளி.10:7

# முன்னுரை

இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு மக்களை ஆயத்தபடுத்த ஒரு ஊழியம் எழும்பவேண்டியது அவசியம் என்று வேதத்தில் உரைக்கப்பட்டிருக்கிறது. மல்கியா 4:5,6, லூக்கா 17:30 மற்றும் வெளிப்பாடு 10:7 அது போன்று வேதத்தில் உறைக்கபட்டிருக்கிற அனேக தீர்க்கதரிசன வசனங்களுக்கு வில்லியம் பிரன்ஹாம் அவர்களின் மகத்தான ஊழியமே பரிசுத்த ஆவியின் பிரதியுத்திரமாக இருக்கிறது. இந்த உலகளாவிய ஊழியம் தேவனுடைய ஆவியினாலே கடைசிகாலத்தில் தொர்ந்து நடைபெறும் அவருடைய கிறியைகள்.

நீங்கள் இந்த செய்தியை ஜெபத்துடன் வாசிக்கும்போது இந்த அச்சடிக்கபட்ட வார்த்தையானது உங்களுடைய இருதயத்தில் எழுதபட்டதாய் மாறவேண்டும் என்பதே எங்களுடைய ஜெபம்.

இம்மொழியாக்கம் முழு கவனத்தோடு கச்சிதமாய், எதையும் கூட்டாமலும் குறைக்காமலும், முடிந்த அளவிற்க்கு முயற்சியெடுக்கபட்டிருக்கிறது. இருப்பினும் வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பிரசிங்கித்த ஆங்கில ஒளிநாடாவே அதிகாரப்பூர்வமானது.

வில்லியம் பிரன்ஹாம் அவர்கள் பிரசங்கித்த 1,100 ஒளிநாடாக்களும் புத்தகங்களும் அனேக மொழிகளில் பதிவிறக்கம் செய்யவும் அச்சடிக்கவும் இலவசமாய் உள்ளது.

இந்த புத்தங்கள் எந்த மாறுதலும் இல்லாமல் இருக்கிறபடியே முழுமையாய் மறு அச்சடித்து இலவசமாய் வினையோகிக்க அனுமதி உண்டு

# விசுவாசிக்க மாத்திரம் செய்

1 உங்களுக்கு நன்றி, சகோதரன் பேக்ஸ்டர். மாலை வணக்கம்,நண்பர்களே. நம்முடைய கர்த்தரும் இரட்சகருமான இயேசு கிறிஸ்துவை உங்களோடு ஆராதிப்பதற்கு இன்று இரவு உங்களோடு இருப்பதற்காக நான் மிகவும் மகிழ்ச்சியுள்ளவனாய் இருக்கிறேன். நாம் எப்படியாக அவரை நேசிக்கிறோம். அவர் நமக்கு என்னவாக இருக்கிறார். தேவன் அவரை நேசிப்பவர்களுக்காக களஞ்சியத்தில் கொண்டிருப்பவைகளை கண்கள் கண்டதுமில்லை, காதுகள் கேட்டதுமில்லை... மனுஷனுடைய இருதயத்தில் தோன்றவுமில்லை“என்று அது சொன்னதில் ஆச்சரியமில்லை. அவர் நிச்சயமாக அற்புதமானவர். மேலும்...

உங்களுக்கு நன்றி. ஒரு உலோகத்தாலான மலரை கொண்டிருப்பதென்பது ஒரு வகையாக விசித்திரமாக உள்ளது,இல்லையா? நல்லது, இது என்னுடைய சத்தத்தை அங்கே வெளியே சற்று தூரத்தில் அனுப்பும்படி உதவி செய்யும் ஏதோ ஒன்றாக ஒரு வேளை இருக்கும். நான் ஒரு வகையில் சிறியவனாக இருக்கிறேன். எப்படியாயினும் மிக அதிக அளவு சத்தத்தை பெற்றிருக்கவில்லை. எனவே அதை வெளியே போகச் செய்யும்படியாக அங்கே உள்ளே சிறிது மேலாக இருக்கும்படியான ஒரு வகையான முயற்ச்சியாக அவர்கள் கொண்டிருக்க வேண்டுமென்று நான் யூகிக்கிறேன்.

சகோதரன் ஜேக்ஸன் நம்முடன் இருக்கிறார் என்று என்னுடைய மகன் சிறிது நேரத்திற்கு முன்பு என்னிடம் சொல்லிக் கொண்டிருந்தான். ஆம் சகோதரன் ஜாக்ஸன், தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. நான் இன்றிரவு இங்கே நம்முடன் அவரை காண்பதற்காக மிகவும் மகிழ்ச்சி அடைகிறேன். சகோதரன் ஜேக்ஸனை கர்த்தர் ஆசீர்வதிப்பாராக.

2 பில்லி வந்து என்னை ஏற்றிக் கொண்டு சாலையில் வந்து கொண்டிருக்கும் போது, அவன், “அப்பா, இன்றிரவு சகோதரன் ஜேக்ஸன் அங்கே மேலே இருக்கிறார்” என்றான். மேலும் நான் வேறொரு நாளில் அவருக்காக எதிர்ப்பார்த்துக்கொண்டிருந்தேன். நாங்கள் முதலாவது சந்தித்ததை சகோதரன் ஜேக்ஸனையும், என்னையும் நான் நினைத்துக் கொண்டிருந்தேன். அது மேலே இருந்தது. அது அவருடைய சபையில் ஒரு எழுப்புதலில் என்று நான் நம்புகிறேன். அது நாம் ஒருவருக்கொருவர் சந்தித்துக் கொண்டபோதென்று நான் நம்புகிறேன். அது மிஸௌரியிலுள்ள கென்னட்டில் இல்லையா? மிஸௌரியிலுள்ள தாக்ஸ்டன்,தாக்ஸ்டன். நல்லது, சகோதரன் ஜேக்ஸன், அப்பொழுது அணையில் அதிக அளவு தண்ணீர் போனது, இல்லையா? ஆனால் ஒரு மிக உயர்ந்த நிலையில், வழக்கத்திற்கு மாறான வழியில் சகோதரன் ஜேக்ஸனை கர்த்தர் பயன்படுத்திக்கொண்டு வருகிறார். சபைக்கு மகத்தான வெகுமதியான ஒருவர்...ஒரு அற்புதமான வெற்றியுடன் அவர் வியாதிக்காக ஜெபிக்கிறார். மேலும் அது மாத்திரமல்ல,ஆனால் அவர் கரங்களின் மீது, ஆவியின் ஞானஸ்நானத்தின் நாட்களின்

தனிச்சிறப்பான குறிப்பிடத்தக்கவர்களில் ஒருவரை கொண்டிருக்கிறார்.

3 அப்பொழுது நான் முதலாவதாக பெந்தெகோஸ்தே ஜனங்களிடம் வரும்போது, பரிசுத்தாவிக்காக தேடி காத்திருத்தலை பற்றி அவர்கள் பேசுவதை கேட்டேன். நான் அதை புரிந்து கொள்ள இயலவில்லை. சில இரண்டாயிரம் வருடங்களாக பரிசுத்த ஆவியானவர் இங்கே இருந்து கொண்டிருக்கும்போது ஏன் காத்திருக்க வேண்டும்?"காத்திருத்தல்"; என்ற வார்த்தையானது ஜெபிப்பதை குறிக்கவில்லை என்பதை நான் கண்டேன்."காத்திருத்தல்" என்பதற்கு எதிர்ப்பார்த்திரு என்று அர்த்தம். நல்லது, பெந்தெகோஸ்தே நாளானது முழுவதுமாக வரும்வரை அவர்கள் காத்திருக்க வேண்டியதாய் இருந்தது என்று நான் கண்டேன், ஆனால் அதற்கு பிறகு, அங்கே காத்திருத்தல் என்பது இல்லாதிருந்தது. பேதுரு இந்த வார்த்தையை பேசின போதே, பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மீது விழுகிறார். பவுல் அவர்கள் மேல் தன்னுடைய கைகளை வைக்கிறார், அவர்கள் பரிசுத்த ஆவியை பெற்றனர். நல்லது, அங்கே சிறிய ஏதோ ஒன்று வித்தியாசமாய் இருந்ததைப் போன்று எனக்கு காணப்பட்டது. பிலிப்பு வெளியே சென்று சமாரியர்களுக்கு பிரசங்கித்த போது, அவர்கள் யாவரும் வார்த்தையை ஏற்றுக்கொண்டு ஞானஸ்நானம் பெற்றனர், ஆனால் அவர்கள் யாரின் மீதும் பரிசுத்த ஆவியானவர் வரவில்லை. பவுல், நான் பேதுரு என்று கருதுகிறேன், அவனும், யோவானும் வந்து, அவன் ஜெபித்து அவர்கள் மீது கரங்களை வைத்தான். பரிசுத்த ஆவியானவர் அவர்கள் மீது வந்தார். நல்லது, நான், அது அப்போஸ்தலத் துவமானதாக இருக்குமென்று, அந்த வழியில் தான் நான் நம்புகிறேன். அந்த வழியில் தான் வேதவசனம் அதை உரைக்கிறது என்று நினைத்தேன். மேலும் இப்பொழுது தேவன் நம்முடைய சகோதரன் ஜேக்ஸனுக்காக காரியம் அப்படியே அதுவாகத்தான் உள்ளது. நான் அதை கண்டதில்லை; அதை குறித்து அதிகமாக கேள்விப்பட்டிருக்கிறேன்.

சகோதரன் ஜேக்ஸன் அங்கே மேலே இருந்தபோது அங்கே மேலே டல்லாஸில் இருந்ததாக என்னுடைய மகன் என்னிடம் கூறினான். பீடத்தினூடாக எங்கோ ஓரிடத்தில் ஜனங்களை ஒன்று கூட்டினவாறு அவரை கண்டேன், நெடுகிலும் போய் அவர்கள் மேல் கரங்களை வைத்தார். அவர் அவர்கள் மீது கரங்களை வைத்தவாறே அவர்கள் பரிசுத்தஆவியை பெற்றனர். அதைத்தான் வேதவசனம் உரைக்கிறது. அதாவது... நான் அதை அப்படியே விசுவாசிக்கிறேன். அதாவது - அது செய்யப்பட வேண்டிய வழி அதுதான் என்று வேதவசனம் உரைக்கிறது. எனவே கர்த்தருடைய வருகைக்கு சிறிது முன்பதாக தேவன் அதை நம்முடைய சபைக்கு கொடுத்திருக்கிறார் என்பதைக்குறித்து நான் மிகவும் மகிழ்ச்சியுள்ளவனாய் இருக்கிறேன். அது அற்புதமாக இல்லையா? ஓ என்னே. நாம் பூமியின் மீதுள்ள சந்தோஷமான ஜனங்களாக கட்டாயமாக இருந்தாக வேண்டும்.

4 நம்முடைய போர் கவசத்தை பயன்படுத்துங்கள். நாம் ஒரு போர் கவசத்தை பெற்றுள்ளோம். தேவன் நம்முடன் கிரியை செய்து போர்

வார்த்தையும் ஊக்குவிக்கப்பட்டுள்ளது. அதன் ஒவ்வொரு துண்டும் உண்மையாயுள்ளது. பரிசுத்த ஆவியானவர் காலத்தினூடாக அதை கண்காணித்தார். தேவனுடைய எல்லா வார்த்தையும் ஊக்குவிக்கப்பட்டதாயுள்ளது.

10 நேரத்தில் பழைய சக்கரம் மெதுவாக அரைக்கிறது. ஆனால் அது நிச்சயமாகவே அரைக்கிறது. அது இருக்கப் போகிறது என்று தேவன் சொன்ன அந்த வழியில் அப்படியே அது இருந்தாக வேண்டும். அது எவ்வளவு தெளிவற்றதாய் காணப்படுகிறது என்பது காரியமில்லை,ஆனால் நான் சென்ற இரவு பேசினது போன்று அந்த வழியில் அது இருந்தாக வேண்டும். ஒரு சமயம் அவர்கள் மின்சாரத்தை கொண்டிருக்கவில்லை. ஆனால் ஏதோ ஒரு மனிதன் அங்கே அப்படிப்பட்ட ஒரு காரியம் இருந்ததென்று விசுவாசித்தான். அது என்னவாக இருந்ததென்பதை அவன் கண்டு பிடிப்பதுவரை இடை நிறுத்தமின்றி கடுமையாக உழைப்பதில் அவன் உறுதியாக நிலைத்திருந்தான். தொலைக்காட்சிக்கும், மோட்டார் வண்டிக்கும்,மற்றவைகளுக்கும் அதே காரியம்தான். நம்முடைய நன்மைக்காகவே தேவன் இங்கே இந்த எல்லா காரியங்களையும் வைத்துள்ளார்.

இப்பொழுது இயற்கைக்கு மேம்பட்டவைகளுடன் பழக்கப்படுத்திக் கொள்ளுகிறவர்களாகிய நாம், அப்படியே ஒரு மனிதனை எடுத்துக் கொள்வோமானால், இங்கே அவனுடைய புலன்களிலுள்ள அந்த மனிதன் அவனுடைய புலன்களுக்கு கட்டுப்பட்டவனாய் இருக்கிறான். ஆனால், ஒரு மனிதனும், அவனுடைய ஆவியும் கட்டுபாடற்றதாயுள்ளது. அறிவின் விருட்சமானது மிகவும் அதிகமாய் படர்ந்து மேலேறுகிறதாய் மட்டும் முடியும். மேலும் அது பின்னால் முறிக்கப்படும். ஆனால் ஜீவவிருட்சமானது என்றென்றுமாக போய்க் கொண்டேயிருக்கிறது. நாம் அவனுடைய ஆத்துமாவுடன் கொண்டிருப்பதைவிட, விஞ்ஞானமானது அவனுடைய ஐம்புலன்களுடன் மனிதனை தூரத்தில் எடுத்து செல்லுகிறது. நல்லது, எல்லாம் கைக்கூடும் என்ற தடையில்லாத ஆதாரத்தை நாம் பெற்றுள்ளோம். வெடிக்கும் அணுக்களை குறித்து பேசுங்கள். மேலும், மேலும்- மேலும்- மேலும் வழி...



கவசத்தை நமக்கு கொடுக்கிறார். மேலும் ஒரு போர் கவசமும் இயற்கைக்கு மேம்பட்டதின் மீது உள்ளது பாருங்கள், பாருங்கள்? அன்பு,சந்தோஷம், சமாதானம், நீடிய பொறுமை, நற்குணம், சாந்தம்,தயவு , பொறுமை அனைத்துமே இயற்கைக்கு மேம்பட்டவைகள். நீங்கள் உங்களுடைய விசுவாசத்தை தேவனுடைய ஆவிக்கு கட்டவிழ்த்துவிட அனுமதித்தால், உங்களுக்கு தேவனுடைய பாவ பரிகார ஆசீர்வாதத்திற்கு உங்கள் சரீரத்தை கீழ்ப்படுத்துவதில் அது செய்கிறது கொண்டு வருகிறது. எதற்காக இயேசு மரித்தாரோ, அவர் இன்றிரவு பிதாவின் வலது பாரிசத்தில் உட்கார்ந்து உங்களுடைய அறிக்கையின் பேரில் பரிந்து பேசிக்கொண்டிருக்கிறார். அவர் செய்திருப்பது எதுவாயினும், அதை நீங்கள் அறிக்கையிட்டு, நீங்கள் அதை விசுவாசியுங்கள். அது உங்களுடைய சொந்த சொத்தாக இருக்கிறது. ஒவ்வொரு விசுவாசிக்கும், மறுபடியும் பிறந்த ஒவ்வொரு நபருக்கும் எந்த பாவபரிகார ஆசீர்வாதங்களுக்கும் உரிமை உண்டு.

நீங்கள் இரட்சிக்கப்பட்டபோது, ஜீவிய பிரயாணத்தின் எல்லாவற்றினூடாகவும் உங்களை உயிருடன் வைக்க இயேசு ஒரு காசோலையை அப்படியே எடுத்து உங்களிடம் கொடுக்கிறார், மேலும் அவருடைய நாமமானது அவைகளின் ஒவ்வொன்றின் அடி பாகத்திலும் கையொப்பமிடப்பட்டுள்ளது. நமக்கு தேவையானது எதுவோ, “என் நாமத்தில் நீங்கள் பிதாவிடம் கேட்டுக்கொள்வது எதுவோ, அது செய்யப்படும்”. அப்படியே ஒரு காசோலையை கையொப்பமிட்டு அங்கே மேலே அதை அனுப்புங்கள். இன்று இரவு ஒன்றை கையொப்பமிடுவதற்கு நீங்கள் பயப்படுகிறீர்களா? இல்லை,அதை நிரப்பி, அதை மேலே அனுப்புங்கள்; அது அடையாளம் கண்டுகொள்ளப்படுகிறது. ஆம் ஐயா, அது அடையாளம் கண்டு கொள்ளப்படுகிறது. அவர் நிச்சயமாகவே அதை நடப்பிப்பார்.

5 இப்பொழுது, நான் அப்படியே சிறிது காலதாமதமாக இருக்கிறேன். எனவே என்னுடைய ஆராதனைகள், நீங்கள் கவனித்தபடி, நான் அவர்களை அதிக நேரம் பிடித்து வைக்கவில்லை, ஏனெனில் இது தரிசனத்தின் கீழாக இருக்கிறது. மேலும் தரிசனமானது என்னை அதிகமாக பெலவீனமாக்குகிறது. அது ஏதோ ஒன்றை செய்கிறது. நான் இப்பொழுது இங்கே அப்படியே சிறிது வாசித்துவிட்டு, பிறகு நாம் சரியாக ஆராதனைக்குள் செல்வோம்.

அப்படியே ஒரு வேத வாக்கிய வாசிப்பிற்காக, பரி. லூக்கா 2-ஆம் அதிகாரத்தில் 25- வது வசனம் தொடங்கி நாம் இதை வாசிக்கிறோம். அப்பொழுது சிமியோன் என்னும் பேர் கொண்ட ஒரு மனுஷன் எருசலேமில் இருந்தான்; அவன் நீதியும் தேவ பக்தியும் உள்ளவனாயும், இஸ்ரவேலின் ஆறுதல் வர காத்திருக்கிறவனாயும் இருந்தான். அவன் மேல் பரிசுத்த ஆவி இருந்தார்.

கர்த்தருடைய கிறிஸ்துவை நீ காணும் முன்னே மரணமடைய மாட்டாய் என்று பரிசுத்த ஆவியினாலே அவனுக்கு அறிவிக்கப்பட்டும் இருந்தது.

அவன் ஆவியின் ஏவுதலினால் தேவாலயத்திலே வந்திருந்தான். இயேசு என்னும் பிள்ளைக்காக நியாயப்பிரமாண முறைமையின்படி செய்வதற்கு தாய், தகப்பனார் அவரை உள்ளே கொண்டு வருகையில், அவன் அவரை தன் கைகளில் ஏந்திக் கொண்டு,தேவனை ஸ்தோத்தரித்து; ஆண்டவரே உம்முடைய வார்த்தையின்படி உமது அடியேனை இப்பொழுது சமாதானத்தோடே போக விடுகிறீர்; புறஜாதிகளுக்கு பிரகாசிக்கிற ஒளியாகவும்,உம்முடைய ஜனமாகிய இஸ்ரவேலுக்கு மகிமையாகவும், தேவரீர் சகல ஜனங்களுக்கும் முன்பாக ஆயத்தம் பண்ணின, உம்முடைய இரட்சண்யத்தை என் கண்கள் கண்டது என்றான்.

6 நாம் நம்முடைய தலைகளை அப்படியே சிறிது நேரம் வணங்குவோமாக. கர்த்தராகிய இயேசுவே, இங்கே ஒன்றாக கூடி வந்திருக்கும் உம்முடைய விசுவாசிக்கும் ஜனங்களைப்போன்று, அவருடைய மகிமையான இராஜ்ஜியத்திற்குள் எங்களை ஏற்றுக் கொள்ளும்படி நம்முடைய கர்த்தருடைய இரண்டாம் வருகைக்காக எதிர்பார்த்துகொண்டிருக்கிறோம். அங்கே அந்த மகத்தான காலத்திற்கு முடிவே இராது...மேலும் இப்பொழுது இன்றிரவு நாங்கள் வயதான சிமியோனை போல எங்களுடைய விசுவாச தோள்களில் இரட்சகரை உயர்த்துவோமாக. இந்த எல்லா ஆசீர்வாதங்களையும் எங்களுக்கு நீர் வாக்களித்தீர். விசுவாசத்தின் மூலமாக நாங்கள் அவைகளை ஏற்றுக்கொண்டு நாங்கள் விசுவாசிக்கிறோம்.

எங்கள் குறைபாடுகளையும், எங்கள் பாவங்களையும், உமக்கு விரோதமான மீறுதல்களையும் எங்களுக்கு மன்னியும். அவிசுவாசம் பாவம் என்று புரிந்து கொள்கிறோம். எனவே எங்களுடைய அவிசுவாசத்தை எங்களுக்கு மன்னியும், கர்த்தாவே. நாங்கள் இங்கே ஒன்றாக கூடியிருக்கையில் இன்றிரவு எங்களுக்கு உதவி செய்யும். வித்தியாசமான சபைகள், வித்தியாசமான ஜனங்கள்,வித்தியாசமான தேசிய பண்புள்ள ஜனங்கள், ஆனால் எல்லாரிலும் கிரியை செய்துகொண்டிருக்கிற தேவன் ஒருவரே. இப்பொழுது உம்முடைய ஆசீர்வாதங்களை ஏற்றுக்கொள்வதற்கு எங்களுக்கு உதவி செய்யும். பரிசுத்த ஆவியானவர் வந்து தேவனுடைய காரியங்களை எடுத்து சரியாக வெளியே இருக்கும் ஜனங்களிடம் கொடுப்பாராக. இதை இயேசுவின் நாமத்தில் நாங்கள் கேட்கிறோம்.ஆமென்.

7 சிறிது நேரம்...முதலாவது காரியம், ஏதாவது ஊழியக்காரர் போதிக்கும் படியாக மேடைக்கு வருவார்களானால், முதலாவது அவருடைய கூட்டத்தாரை எண்ணிப்பார்த்தாக வேண்டும். உங்களுடைய ஆவிக்குரிய நிலையை நீங்கள் பெற்றுக்கொண்டாக வேண்டும். அப்பொழுது அது உங்களுக்கு அதிகமாக உதவி செய்கிறது. வெளியே விசுவாசம் இருக்கும் இடத்தை நீங்கள் உணர்ந்து கொள்ள முடியும். நீங்கள் விசுவாசத்தை எங்கே கொண்டிருக்கின்றீர்கள் என்பதுடன் சகோதரன் ஜேக்ஸன் மிகவும் பழக்கப்பட்டிருக்கிறார் என்பதை நான் யூகிக்கிறேன்.



இப்பொழுது வேதவசன வாசித்தலில், சிமியோன் என்னும் பெயர் கொண்ட ஒரு வயதான மனுஷனை நாம் கண்டு கொள்கிறோம். அவருடைய நீளமான வெள்ளை தாடியும் முடியும் கொண்ட எங்கோ ஒரிடத்தில் ஏறத்தாழ தன்னுடைய எண்பதுகளில்,ஒரு வயதான சாதுவாக நாம் ஒரு வேளை அவரை அழைக்கிறோம். மேலும் அவர் ஒரு மிகவும் பக்தியுள்ள, மதசம்பந்தமான நபராக இருந்தார். கர்த்தராகிய கிறிஸ்துவை அவர் காண்பதுவரை அவர் மரிக்கப் போவதில்லை என்று பரிசுத்த ஆவியானவர் அவரிடம் வெளிப்படுத்தியிருந்தார். அவர் கர்த்தரை காண்பது வரையில் அவர் மரிக்கப் போவதில்லை என்று சுற்றுலும் சென்று ஜனங்களிடம் கூறுவதற்கு அவன் பயப்படவில்லை

8 இப்பொழுது, அது ஜனங்களுக்கு எவ்வளவாக மதவெறித்தனமாக காணப்பட்டது என்பதை நீங்கள் கற்பனை செய்து பார்க்க முடியும். ஏன், வயதான நபர் இரக்கமுடையவர், வயதை பெற்றுள்ள ஒருவகையானவராக அவர் இருக்கிறார் என்றும், அவருடைய மனமானது மேலும் அந்த நிலையில் தான் அவர் இருக்கிறார் என்பதை நீங்கள் அறிவீர்கள். ஏன், ஏன் பாருங்கள், தாவீது கூட அவருக்காக எதிர்ப்பார்த்துக் கொண்டிருந்தான். மற்றும் எல்லோரும்...ஏன், நாலாயிரம் வருடங்கள் ஆகிவிட்டது. இங்கே இந்த வயதான மனிதன் ஏறக்குறைய இப்பொழுதே கல்லறைக்கு போக ஆயத்தமாயிருக்கிறான். கிறிஸ்துவை அவன் காணும்வரை அவன் மரிக்கப்போவதில்லை என்று சொல்லுகிறான். மேலும் இங்கே நாமெல்லோரும் ரோம பேரரசின் கீழே, ரோமர்களின் அரசாங்கங்களின் கீழே இருக்கிறோம். ஏன் நம்மால் முடியாது...நல்லது, கிறிஸ்து இப்பொழுது வரப்போவதில்லை"என்று அவர்களில் சிலர் கூறுவதை என்னால் கேட்க முடிகிறது.

9 ஆனால் சிமியோனோ விசுவாசிப்பதற்கு ஒரு அஸ்திபாரத்தை உடையவனாயிருந்தான், ஏனெனில் அவன் கிறிஸ்துவை காண்பது வரையில் அவன் மரிக்கப்போவதில்லை என்று பரிசுத்த ஆவியானவர் மூலம் அவனுக்கு வெளிப்பட்டிருந்தது. இப்பொழுது அது விசுவாசிப்பதற்கு நல்ல வழியாக உள்ளது;பரிசுத்தஆவியானவர் உங்களுக்கு அதை வெளிப்படுத்துகிற போது,அதை விசுவாசியுங்கள். அந்த புஸ்தகத்தில் அப்படியே ஒரு முழுமையானது உள்ளது. நான்-நிரம்ப, எதை குறித்தும் அறியேன். ஆனால் இருப்பினும் அதன் ஒவ்வொரு வார்த்தையையும் நான் விசுவாசிக்கிறேன். நான் அதை விளக்க முடியாது. ஆனால் நான் அதை விசுவாசிக்கிறேன்.

நான் இப்பொழுது வீட்டில், ஆதியாகமத்தில், ஆதியாகமத்தை எடுப்பதன் வழியாக நானே ஒரு வரிசையாக ஓடிக்கொண்டிருக்கிறேன். ஏன்? ஏன்? ஆதியாகமத்தில் நீங்கள் ஊக்குவித்தலை நீங்கள் காண்பீர்களா... ஆதியாகமத்தில் முதலாம் அதிகாரத்தை நீங்கள் எடுக்க முடியும். வேதாகமத்தினூடாக, வெளிப்படுத்தல் கடைசி அதிகாரத்தினூடாக வளைந்து நெளிந்து செல்லுங்கள், அதன் ஒவ்வொரு சிறு துண்டும் ஊக்குவிக்கப்பட்டதாயுள்ளது. தேவனுடைய முழு வார்த்தையும் எவ்வளவாக தொடர்புள்ளதாயுள்ளது. அதன் ஒவ்வொரு